24th January 1964]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஈரோடில் அரெஸ்டு ஆன ஸப்-இன்ஸ்பெக்டர் அர்ஜுனன் என்பவர் 15 வருஷ காலம் ஸர்வீஸில் இருந்ததாக தெரியவருகிறது. இந்த 15 வருஷ காலத்தில் தன்னுல் இயன்ற வரைக்கும் என்னென்ன செய்யவேண்டுமோ, அத்தனையும் செய்து பார்த்து, மதுவிலக்குச் சட்டத்தை அமுல் நடத்த முடியாது, அது கண்டிப்பாக தோல்வியுறும் என்று அறிந்த காரணத்தினுலேதான் இந்தப் புரட்சியை அவர் செய்தார் என்பதைச் சர்க்கார் உணருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பேர்ப்பட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லாமல் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : மது விலக்குக் கொள்கையைப் பற்றியோ அல்லது மது விலக்கு நடைமுறையைப் பற்றியோ யாருக்கும் என்ன கருத்து வைத்திருப்பதற்கும் உரிமை உண்டு. அதைப் பற்றிச் சொல்லுவதற்கு உரிமை உண்டு. ஆனுல், இந்த ஸப்-இன்ஸ்பெக்டருடைய நடத்தையைப் பற்றி நாம் இப்பொழுது ஆராயவேண்டியிருக்கிறது. இவர்மீது ஏற்கனவே சில குற்றச்சாட்டுகள் இருந்து, அவரை வேலையிலிருந்து நீக்கவேண்டும் என்று அவருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். அவை எத்தகைய குற்றச்சாட்டுகள், விவரம் என்ன என்பதை அறிவிக்கமுடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : He was impertinent, disobedient and misbehaving. அவர் அப்பேர்ப்பட்ட அடங்காப்பிடாரி. இன்ஸ்பக்டர் சொல்லுவதை கேட்காது செய்திருக்கிருர்கள். அதனுல் அவர் மீது சார்ஜ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சாக்கடை நீரைப் பிரித்தல்

* 54 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ரசாயன முறைப்படி சாக்கடை நீரை வேருகவும், கழிவைத் தனியாகவும் பிரிக்க ஏதாவது திட்டம் உண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes, on an experimental basis.

எர்ஸ்கின் மருத்துவ மனை (மதுரை)

* 81 கேள்வி—திரு. கரு. சீமைச்சாமி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் உள்ள அரசாங்க எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் படுக்கை வசதி போதாததால் நோயாளிகளை தரையில் படுக்க வைத்திருப்பது உண்மையா ?

(இ) ஆமென்றல், இவ்விஷயத்தில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, **in some cases.**

(*b*) A proposal for increasing the bed strength of the hospital from 1,110 to 1,310 is under active examination.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த ஆஸ்பத்திரியில் தினசரி சராசரி அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை, அதாவது அங்கே தங்கி சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு ? இப்பொழுது அதிகரித்திருக்கும் படுக்கை எண்ணிக்கை அதற்குப் போதுமானதாக இருக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அங்கே இருக்கிற 'இன்-பேஷன்ட்ஸ்' 1,500-லிருந்து 1,600 வரையிலும் இருக்கிறார்கள். இப்பொழுது அதிகப்படுத்தியிருக்கிற படுக்கைகளின் எண்ணிக்கை அதற்குப் போதிய வகையில் இருக்காது. அப்பொழுதும் குறைவாகத்தான் இருக்கும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இந்த ஆஸ்பத்திரியில் தரையில் படுத்துக்கொள்கிற அளவுக்கு உள்ள பேஷன்ட்ஸ் எண்ணிக்கை எவ்வளவு ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இதே மாதிரி, இதைவிட மோசமான நிலையில் மற்ற மாவட்ட தலைநகர ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆஸ்பத்திரியின் தேவை என்ன என்பதை கணக்கெடுத்து, அதற்குத் தகுந்தபடி படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எங்கெங்கே படுக்கைகளை அதிகரிக்கவேண்டுமோ, அங்கெல்லாம் அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து, நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்தப் பிரச்னை நீண்டகாலமாக இருக்கக்கூடிய ஒரு பிரச்னை. இன்னும் சில காலத்திற்கு இவ்வாறு இருக்கும் என்று எதிர்பார்க்கக்கூடிய காரணத்தால், இதை எப்படி சமாளிக்கப் போகிறார்கள் ? ஆஸ்பத்திரிகளின் அமைப்பு முறையை வேறு விதமாக மாற்றி அமைப்பது பற்றி பரிசீலனையில் இருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அப்படி ஒன்றும் இல்லை.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : இந்த ஆஸ்பத்திரி மூன்று ஜில்லாக்களுக்கு ஒரு முக்கியமான இடமாக இருப்பதனால், நாளுக்கு நாள் நோயாளிகள் அதிகமாக வந்து கொண்டிருக்கிறார்

24th January 1964]

கள். அங்கே குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருப்பது ஒருபுற மிருக்க, கக்கூஸ்களுக்குக்கூட தண்ணீர் இல்லை. ஆகவே தண்ணீர் வசதிக்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆஸ்பத்திரிகளைப் பொறுத்த வரையில் தண்ணீர் வசதியை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று ஸ்கீம் போட்டு வேலை நடந்து வருகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நான் முன்பு ஒரு கேள்வி கேட்ட தற்கு கனம் அமைச்சர் அவர்கள் அம்மாதிரி இல்லை என்று சொன்னார்கள். ஆஸ்பத்திரிகளின் அமைப்பை மாற்றி அமைப்ப தற்கு டாக்டர் ஏ. எல். முதலியார் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, பரிட்சைக்காக வரும் நோயாளிகளை பாலி கிளினிக்களுக்கு அனுப்பித்து, சிகிச்சைக்கு மட்டும் பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தால் நலமா யிருக்கும் என்று சொன்னது கனம் அமைச்சருக்குத் தெரியுமா? அது எந்த கட்டத்தில் இருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அவ்வாறு குழு அமைக்கப்பட்டிருப்பது உண்மை. ஆனால் அந்த ரிப்போர்ட் அரசாங்கத்திற்கு வரவில்லை.

கனம் சபாநாயகர் : அதற்குள் கனம் அங்கத்தினருக்குத் தெரிந்துவிட்டதே! (சிரிப்பு).

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவ்வாறு குழு அமைக்கப்பட்டு, இப்பொழுது விசாரணை எந்தக் கட்டத்தில் இருக்கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் கொடுக்கலாம்.

திரு. ஆ. துரையரசன் : சென்னை தலைமை மருத்துவ நிலையத்தில் . . .

கனம் சபாநாயகர் : மூலக் கேள்வி மதுரை ஆஸ்பத்திரியைப் பொருத்தது. பொதுவாகக் கேட்கலாமே தவிர, தனித்தனி ஆஸ் பத்திரிகைகளைப் பற்றிக் கேட்கக் கூடாது. எல்லா ஜில்லாக்களையும் பற்றிக் கேட்டால் என்ன செய்வது?

திரு. ஆ. துரையரசன் : 200, 300 மைல்களுக்கு அப்பாலிருந்து தலைமை மருத்துவ நிலையத்திற்கு மருத்துவ வசதி பெற நோயாளி கள் வருகிறார்கள். இட வசதி இல்லாத காரணத்தினால், அவர் களுக்கு அட்மிஷன் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. வெளியே இருந்து வைத்தியம் செய்து கொள்வதற்குப் போதுமான பொரு ளாதார வசதி இல்லாத காரணத்தினால் சிரமப்படுகிறார்கள். திரும் பிப் போவதற்கும் சிரமப்படுகிறார்கள். ஆகவே படுக்கை வசதியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அட்மிஷன் யாருக்கும் மறுக்கப்படுவது கிடையாது. வெளியிலிருந்து வருகிறவர்களுக்கு எந்த அளவுக்கு வசதிகள் செய்து கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்கு செய்துகொண்டு வருகிறார்கள். அதிகப்படியாக நோயாளிகள் வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

[24th January 1964

திரு. பி. கே. மூக்கையா தேவர் : தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளுக்கு ஒரு சாதாரண கேஸ் வந்தாலும், பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுகிறார்கள். ஆகவே மதுரை ஜில்லாவிலுள்ள தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளை விரிவுபடுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தற்போது அந்த மாதிரி உத்தேசம் இல்லை.

State Transport Buses

* 82 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total strength of fleet as on 1st June 1963 operating on the Madras City routes of the State Transport system;

(*b*) the programme for increasing the fleet strength during 1963–64; and

(*c*) whether this programme is affected in any manner due to the emergency?

THE HON. SRI R. VENKATARAMAN :

	Buses.
(*a*) City routes	467
Suburban services	173
Total ...	640

	Buses.
(*b*) City fleet to be augmented by	60
Suburban services to be augmented by	25
Total ...	85

(*c*) Care has been taken to see that the programme for augmentation is not affected as far as possible.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நகரத்தில் இருக்கக்கூடிய போக்குவரத்து நெருக்கடியை சமாளிப்பதற்கு இன்னும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பஸ்களை அதிகப்படுத்துவதுதான் இந்த நெருக்கடியை சமாளிப்பதற்கு முறை. அதற்காகத்தான் இந்த புரோகிராமைப் போட்டிருக்கிறோம்.